A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.

-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 90 / 2023**

திருமதி மங்கை, க/பெ. சாத்தப்பன்,
எண்.11, காஞ்சி மாநகர்,
சேரன் மாநகர் 6வது பஸ் ஸ்டாப் அருகில்,
விளாங்குறிச்சி போஸ்ட், கோவை – 641 035.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு S. செல்வமுத்துகுமரன்)

எதிர்

1. செயற்பொறியாளர்/ பகிர்மானம்/காரைக்குடி,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS வளாகம், கழனிவாசல், காரைக்குடி – 630 702.

2. உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம்/நகர்/காரைக்குடி,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS வளாகம், கழனிவாசல், காரைக்குடி – 630 702.

3. உதவி பொறியாளர்/ பகிர்மானம்/ஊரகம்/காரைக்குடி,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS வளாகம், கழனிவாசல், காரைக்குடி – 630 702.

. . . எதிர்மனுதாரர்
(திருமதி M. லதாதேவி, செயற்பொறியாளர்/ பகிர்மானம்/காரைக்குடி
திருமதி P. புவனேஷ்வரி, உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம்/நகர்/காரைக்குடி
திரு D. அருண்தேவராஜ் எடிசன், உதவி பொறியாளர்/ பகிர்மானம்/ஊரகம்/காரைக்குடி)

**மனு பெறப்பட்ட நாள்: 11-12-2023**

**கேட்புரை நாள்: 14-02-2024**

**ஆணை நாள்: 16-02-2024**

11.12.2023 அன்று பெறப்பட்ட திருமதி மங்கை, க/பெ. சாத்தப்பன், எண்.11, காஞ்சி மாநகர், சேரன் மாநகர் 6வது பஸ் ஸ்டாப் அருகில், விளாங்குறிச்சி போஸ்ட், கோவை – 641 035 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 90/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 14.02.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையின் மூலம் பெறப்பட்ட வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

தனது ஷண்முகநாதபுரம் கிராமம், மேலசெம்பொன்மாரியில் அமைந்துள்ள சர்வே எண் 443/5–இல் உள்ள துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு எண் 403–002–1490–ஐ மீண்டும் வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தனது சர்வே எண் 443/5–இல் உள்ள துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு எண். 403–002–1490–ஐ மீண்டும் மறு இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் சிவகங்கை மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.3 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சிவகங்கை மின் பகிர்மான வட்டம் 16.08.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

### 3.0 மன்றத்தின் தீர்வு :

3.1 சிவகங்கை மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 16.08.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*மனுதாரரின் வாதுரையிலிருந்து மின் இணைப்பு வழங்கப்பட்ட இடமானது மனுதாருக்கு உரிமையானது என்பதற்கான வருவாய் ஆவணங்கள் அல்லது பத்திரப்பதிவு ஆவணங்கள் அல்லது நீதிமன்ற உத்தரவிலோ குறிப்பிடப்படவில்லை என்பதால் மனுதாரருக்கு சொந்தமானது என்று கருதமுடியாது மற்றும் மனுதாரருக்கு சொந்தமானது என்பதற்கான ஆவணங்கள் போதுமான அளவு கால அவகாசம் வழங்கியும் இம்மன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. எதிர்மனுதாரர்களின் வாதுரையிலிருந்து உரிய அறிவிப்பு வழங்கப்பட்டு, உரிய கால அவகாசம் வழங்கப்பட்ட பின்னரே 23.08.2022 அன்று தற்காலிக மின் துண்டிப்பு செய்துள்ளனர். போதிய கால அவகாசம் வழங்கியும் மனுதாரர் எவ்வித ஆவணங்களும் சமர்ப்பிக்கவில்லை என தெரிகிறது.*

*இருந்த போதிலும் மின்சாரம் என்பது மிகவும் அத்தியாவசியமானது என்பதாலும், இன்றைய சூழ்நிலையில் மின்சாரம் என்பது குடும்பத்தின் வாழ்வாதாரமாக உள்ளது என்பதால் எதிர்மனுதாரர்கள் மின் இணைப்பை வழங்க வேண்டும் என்பது நியாயமானது. ஆனால் எதிர்மனுதாரர்கள் தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணைய விதிகளுக்கு உட்பட்டு மின் இணைப்பு வழங்க வேண்டும்.*

*உரிமைதாரர் அல்லாதவர் எனில் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க "தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணைய மின்பகிர்மான விதி தொகுப்பு அத்தியாயம் (5)27 (4) இருப்பிடத்துக்குச் சொந்தக்காரராக இல்லாமல் மின் வழங்கல் கேட்கும் நுகர்வோராக விருப்பமுள்ளவர் அதைப்பெற இந்த விதித்தொகுப்பின் படிவம் 5இன் படியான சம்மதக் கடிதத்தை இருப்பிட உரியமையாளரிடமிருந்து பெற்றுத்தர வேண்டும் சொந்தக்காரர் கிடைக்கவில்லையென்றாலோ அல்லது சம்மதக் கடிதம் தர மறுத்துவிட்டாலோ நுகர்வோராக விருப்பமுள்ளவர் அந்த இருப்பிடத்தில் குடியிருப்பதற்கான செல்லத்தக்க சான்றை தர வேண்டும் மேலும் இவ்விதியின் படிவம்-6 இன்படியான காப்புறுதி பத்திரத்தின் வாயிலாக குடியிருப்பவருக்கு மின்னிணைப்பு வழங்கலால் உருவாகும் தகராறுகளால் உரிமம்தாரருக்கு விளையும் இழப்புக்குக் காப்புறுதி தந்து மேலும் இயல்பான காப்புறுதித் தொகையைப் போல இரட்டிப்பு மடங்குத் தொகையை காப்புறுதித் தொகையாகச் செலுத்தவும் உறுதியேற்க வேண்டும்.*

*விளக்கம் : இந்த உள் ஒழுங்குமுறை விதிக்காக செல்லத்தக்க சான்று" என்றால் பதிவு செய்யப்பட்ட அதிகார அளிப்பு ஆவணம் அல்லது மின்னிணைப்பிற்கான விண்ணப்பம் கொடுக்கும் தேதிக்கு முன் அளிக்கப்பட்ட சமீபத்திய வாடகை ரசீது அல்லது குத்தகை ஒப்பாவணம் அல்லது நீதிமன்ற தீர்ப்புகள், உத்தரவுகள் அல்லது உரிய அதிகார அமைப்பிடமிருந்து பெறப்பட்ட உடைமை கட்டளை போன்ற குடியிருப்பு சான்று" மனுதாரரிடமிருந்து பெற*

*வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால் மனுதாரர் செல்லத்தக்க சான்றினை எதிர்மனுதாரர்களிடம் 60 நாட்களுக்கு சமர்ப்பித்து மறு மின்இணைப்பு பெற்றுக்கொள்ளலாம் என்று இம்மன்றம் உத்தரவிடுகிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 14.02.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு S. செல்வமுத்துகுமரன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திருமதி M. லதாதேவி, செயற்பொறியாளர்/ பகிர்மானம்/காரைக்குடி, திருமதி P. புவனேஷ்வரி, உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம்/நகர்/காரைக்குடி மற்றும் திரு D. அருண்தேவராஜ் எடிசன், உதவி பொறியாளர்/ பகிர்மானம்/ஊரகம்/காரைக்குடி, சிவகங்கை மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மனுவை விசாரித்த சிவகங்கை மின்குறைதீர்க்கும் மன்றம் அவர் சமர்ப்பித்த ஆவணங்களை சரியாக பரிசீலனை செய்யாததால், இந்த இடத்தின் உரிமையாளர்கள் யார் என்ற முழு தகவல் அறியாமலேயே

ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், இது தன் வாழ்வாதாரத்தை பாதிக்கக்கூடிய தீர்ப்பு எனவும் தெரிவித்துள்ளார்.

5.2 2018–ஆம் ஆண்டுக்கு முன்பு வரை ஷண்முகநாதபுரம் கிராமம். மேலசெம்பொன்மாரி குரூப் புல எண் –443/5 உட்பிரிவிற்கு முன் 6.56 விஸ்தீரணம் கொண்டதாகவும், அதற்கான கிராம கணக்கு இணைக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 21.05.1966 ஆவணப்படி இந்த இடம் அருணாச்சலம் செட்டியாரின் ஐந்து வாரிசுகளுக்கு பொதுவானது ஒவ்வொரு வாரிசுக்கும் இந்த இடத்தில் (ஒரு பங்கு மட்டுமே) உள்ளதாகவும் (1/5$^{th}$ share for each party) மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 15.06.2018 முன்பு வரை இந்த முழு இடத்திற்கும் ஒரே கூட்டு பட்டா எண். 514 மட்டுமே இருந்ததாகவும், கூட்டு பட்டாவில் இருந்த பெயர்கள் –1) மு.கல்யாணி ஆச்சி (க/பெ –அரு முத்துக்கருப்பன்), 2) அரு. சாத்தப்பன் 3) அரு. அண்ணாமலை 4) ரா. அபிராமி ஆச்சி (க/பெ – அரு. ராமநாதன்) 5) அரு. அருணாச்சலம் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 தனது மின் இணைப்பிற்கு ஆட்சேபனை தெரிவித்த M.R.AR அண்ணாமலை தனக்கு என்று இந்த புலத்தில் உள்ள ஒரு பங்கை தனது மகளான பிரியா அண்ணாமலைக்கு 18–05–2018 ஆம் தேதி தானம் கொடுத்துள்ளதாகவும் (ஆவண எண் 1513/2018) இதன் அடிப்படையில் உட்பிரிவு செய்யப்பட்டு புல எண் 443/11 விஸ்தீரணம் 1.31 மற்றும் பட்டா எண்–704 (பிரியா அண்ணாமலை) உருவாக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 அதே போன்று தனது மின் இணைப்பிற்கு ஆட்சேபனை தெரிவித்த மற்றும் ஒரு நபர் MR.AR சாத்தப்பன் தனக்கு என்று இந்த புலத்தில் உள்ள ஒரு பங்கை தனது மகனான ரமேஷிற்கு 28–05–2018 ஆம் தானம் கொடுத்துள்ளதாகவும் (ஆவண எண் – 1754/2018) இதன் அடிப்படையில் உட்பிரிவு செய்யப்பட்டு புல எண் 443/12 விஸ்தீரணம் 1.31 மற்றும் பட்டா எண்–705 (ரமேஷ்) உருவாக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மேற்குறிப்பிட்டுள்ள நில உட்பிரிவு மற்றும் பட்டா மாறுதல், இந்த இடத்தில் உரிமை உள்ள மற்ற பட்டாதாரர்கள் அனுமதி கோராமல் மோசடியாக வட்டாச்சியர் அலுவலக கூட்டுசதியுடன் வழங்கப்பட்ட மோசடி பட்டாவாகும் என்றும் மேலும் இந்த பட்டா மாறுதலில் முரண்பாடுகளும், பிழைகள் உள்ளதாகவும் இந்த பட்டா மாறுதல் தொடர்பாக எந்த ஒரு விவரவும் பதியப்படவில்லை என VAO தனது அறிக்கையில் கூறியுள்ளதாகவும் VAO அறிக்கை இணைக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 எப்படி பார்த்தாலும், ஆட்சேபனை தெரிவித்த இருவரது பங்கை (2.62 விஸ்தீரணம் 443/11 மற்றும் 443/12) நீக்கி விட்ட பிறகு, மீதமுள்ள 434 விஸ்தீரணம் கொண்ட இடத்தில் இரண்டு புல எண்கள் – 443/5 (262) மற்றும் 443/13 (131) தாக்கலாகி வருகிறது என்றும் இந்த இரு புலங்களில் ஆட்சேபனை தெரிவித்த M.R.AR சாத்தப்பன் மற்றும் M.R.AR அண்ணாமலை அவர்களுக்கு எந்த ஒரு உரிமையும் பங்கும் கிடையாது என்றும் அதற்கான கிராம கணக்கு விவரம் இணைக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 அவர்கள் தங்கள் இருவருக்கும் தலா ஒரு பங்கு என்று மொத்தம் இரண்டு பங்கை எடுத்துக் கொண்டபிறகு மீண்டும் மற்றவர்கள் பாகத்தில் (443/13) பங்கு கோருவது சட்டத்திற்கும் இயற்கைக்கும் எதிரான மோசடி செயலாகும் ஆட்சேபனை தெரிவித்த இருவரது பெயரை பட்டா எண் 514–ல் இருந்து நீக்க கோரி வட்டாச்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளதாகவும் அதற்கான ஆதாரம் இணைக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 மேலும் M.R.AR சாத்தப்பன் மற்றும் M.R.AR அண்ணாமலை தனக்கு எதிராக தொடுத்த பாகப்பிரிவினை வழக்கில் (OS. No. 07/2012) தோல்வியை தழுவி உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது என்றும், குறிப்பாக தான் எந்த இடத்தில் மின் இணைப்பு கோரினாரோ அதே இடத்தை பொது என்று வழக்கில் கூறி தோல்வியை தழுவி உள்ளார்கள் என்பதை நீதிமன்ற தீர்ப்பு உரையை படித்தால் தங்களுக்கு தெரியவரும் என்றும், நீதிமன்ற தீர்ப்பு இணைக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 அவர்கள் நீதிமன்றத்தில் சந்தித்த தோல்வியை எடுத்துக்கொள்ள முடியாமல் தன்னையும் மற்ற பட்டாதாரர்களையும் பழி வாங்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு இதுபோன்று முகாந்திரம் இல்லாத ஆட்சேபனை தெரிவித்து அனைவருக்கும் இடையூறு ஏற்படுத்தி வருவதாகவும், இவர்களுக்கு துணையாக வட்டாச்சியர் மற்றும் பஞ்சாயத்து அலுவலகமும் செயல்பட்டுவருவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 மேலும் இந்த இடத்தில் உரிமை உள்ள மற்ற பட்டாதாரர்கள் அபிராமி ஆச்சி (க/பெ – ராமநாதன்) மற்றும் அழகம்மை (க/பெ –அருணாச்சலம்) ஆகிய இருவரும் M.RAR சாத்தப்பன் ரமேஷ், M.R.AR அண்ணாமலை மற்றும் பிரியா அண்ணாமலை மீது தங்கள் அலுவலகத்துக்கும் மற்றும் கிராம பஞ்சாயத்துக்கும் பதிவு தாபல் மூலம் புகார் மனு அனுப்பியுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 எனவே தங்கள் மின் இணைப்பிற்கு ஆட்சேபனை தெரிவிக்க M.R.AR சாத்தப்பன் மற்றும் MR.AR அண்ணாமலை ஆகிய இருவருக்கும் எந்த ஒரு உரிமையும் இல்லை எனவே தங்கள் அலுவலகம் இடத்தில் சம்பந்தம் உரிமை இல்லாதவர்களின் ஆட்சேபனை மனுவை அனுமதித்து தங்களுக்கு அநீதி இழைத்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.14 மேலும், M.R.AR சாத்தப்பன் மற்றும் M.R.AR அண்ணாமலை தங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு முன்பே ஆட்சேபனை தெரிவித்து விட்டதாகவும், அதன் பின் தங்கள் அலுவலகம் விசாரணை நடத்தி தங்கள் ஆவணங்களை பரிசீலனை செய்த பின்பே தங்களுக்கு மின் இணைப்பு கொடுத்தனர். ஆனால் தங்களுடைய சிவகங்கை குறைதீர்க்கும் மன்றம் உத்தரவு ஆணையில் அவர்களின் ஆட்சேபனையின் பேரில்தான் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது என்று எழுதப்பட்டுள்ளதாகவும், எனவே தங்கள் அலுவலக ஊழியர் ஏன் பொய் தகவலை கூறியுள்ளார் என்பது தெரியவில்லை என்றும் இது மேலும் இந்த வழக்கு தொடர்பாக தங்கள் அலுவலக ஊழியர் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.15 மேலும், மின் இணைப்பை துண்டிப்பதற்கு முன் தங்களுக்கு எந்த ஒரு பதிவு தபாலும் அனுப்பவில்லை என்றும் இருப்பினும் தாங்கள் ஊர்க்காரர்கள் மற்றும் மின்

இணைப்பை துண்டிக்கவந்த ஊழியரின் தொலைபேசி வாயிலாக அறியவந்ததாகவும் எனவே 60 நாட்கள் முன்பே தகவல் தெரிவிக்கப்பட்டது என்று கூறுவது முற்றிலும் பொய்யாகும் முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போன்றுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.16 இந்த இடத்தின் மற்ற உரிமையாளர்களை விசாரித்தால் தங்களுக்கு M.RAR சாத்தப்பன் மற்றும் M.R.AR அண்ணாமலை தங்கள் அனைவருடைய இடத்தை மோசடியாக ஆக்கிரமிக்க நினைக்கும் அவர்களுடைய சதி வேலை தங்களுக்கு தெரியவரும் மற்ற உரிமையாளர்கள் தங்கள் அலுவலகத்திற்கு இவர்கள் இருவர் மீதும் முன்பே புகார் அனுப்பியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.17 எனவே மேலே கூறிப்பிட்டுள்ள காரணத்திற்காகவும், வாதுரை சமயத்தில் சொல்ல இருக்கின்ற காரணத்திற்காகவும், இந்த மேல்முறையீட்டு மனுவை அனுமதித்து ஆட்சேபனை தெரிவிக்க உரிமை இல்லாதவர்களிடம் இருந்து பெறப்பட்ட ஆட்சேபனையை நிராகரித்து, தங்களுக்கு மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 மனுதாரர் அளித்த அனைத்து ஆவணங்களையும் முழுமையாக பரிசீலித்து மனுதாரர் வாதங்கள் மற்றும் எதிர்மனுதார் வாதங்கள் இருவரிடமும் கேட்புரை நாளில் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் மாவட்ட மின்நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றம் சிவகங்கை மூலம் மனு எண். 38/2022 –க்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 கேள்வி 2 முதல் 11 வரை தெரிவித்துள்ள அனைத்து தகவல்கள், தாவாக்கள் அனைத்தும் சொத்து தொடர்பான உரிமையியல் பிரச்சனை மற்றும் வருவாய் துறை சம்பந்தப்பட்டது என்பதால் இது குறித்து மின்வாரியத்தால் (TANGEDCO) விசாரிக்க இயலாது எனவும், மனுதாரர் தெரிவித்துள்ள தகவல் அனைத்தும் வருவாய்துறை சம்பந்தப்பட்ட பட்டா தொடர்பானது என்பதால் இவ்வலுவலகத்தில் நடவடிக்கை எடுக்க

இயலவில்லை எனவே இதற்கான பதில் அளிக்க இயலவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மின்வாரியத்திற்கு (TANGEDCO) ஆட்சேபனை மனு யார் அளித்திருந்தாலும் அதை விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டியது மின்வாரிய (TANGEDCO) அலுவலர்களின் கடமை ஆகும். இதன் அடிப்படையில்தான் மனுதாரர் தெரிவித்த நபர்கள் சார்ந்த புகார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், மேலும் யாருக்கும் எந்த அநீதியும் இழைக்கப்படுவதில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 கேள்வி 14–கிற்கான தகவல் எதிர்மனுதாரரால் மாவட்ட மின்நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றம் சிவகங்கையில் நடத்தப்பட்ட கூட்டத்தில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது அதன் அடிப்பபடையிலேயே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த மின்இணைப்பு தற்போது தற்காலிக மின்துண்டிப்பில் உள்ளது என்ற விவரம் வாதுரையில் தெளிவாக இம்மன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்காலிக மின் துண்டிப்பு செய்வதற்கு முன் முழுமையாக கோப்பில் இருந்த ஆவணங்கள், ஆட்சேபனைதாரர்கள் அளித்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மனுதாரர் கால அவகாசம் வழங்கி அதிலும் கோரப்பட்ட ஆவணங்கள் ஏதும் மனுதாரர் அளிக்காததால் தற்காலிக மின் துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தெரிவித்த இதர தகவல்கள் கற்பனையாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மனுதாரருக்கு வழங்கப்பட்ட மின்இணைப்பு தற்காலிகமாக துண்டிக்கப்பட்டதற்கு நிவர்த்திகாணும் பொருட்டு மனுதாரரிடம் இந்த மின்இணைப்பு வழங்கப்பட்ட ஸ்தலம் தங்களுக்கு சொந்தமானது என்பதற்கான கூடுதல் ஆவணம் வழங்க கோரி கால நிர்ணயம் செய்யப்பட்டு கடிதம் எழுதப்பட்டது ஆனால் மனுதாரர் அந்த கடிதத்தில் குறிப்பிட்ட காலக்கெடுவான 60 நாட்கள் கடந்தும் எந்தவித ஆவணமும் அளிக்கவில்லை எனவும், இதை தொடர்ந்து மின்துண்டிப்பு தொடர்பான அறிவிப்பு கடிதம் மனுதாரருக்கு வழங்க முயன்றபொழுது மனுதாரர் அங்கு இல்லாததால் மனுதாரரை கைபேசியில் இவ்வலுவலக பணியாளர்களை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கப்பட்டு பின்னர் அறிவிப்பு கடிதம் அந்த இடத்திலேயே ஒட்டப்பட்டதாகவும்,

இப்படி இருக்கையில் மனுதாரர் முற்றிலும் பொய்யானது தனது மனுவில் குறிப்பிட்டுள்ளது உண்மைக்கு புறம்பானது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 கேள்வி–16 க்கு இதில் மனுதாரர் தெரிவித்துள்ள விவரங்கள் அனைத்தும் சொத்து தொடர்பான உரிமையியல் பிரச்சனை என்பதால் மனுதாரர் தெரிவித்ததுபோல் மற்றவர்களை விசாரணை செய்ய இயலாது. மேலும் இடம் சம்பந்தமான மோசடி என மனுதாரர் தெரிவித்துள்ள வாதத்தின் மீது காவல் துறையையோ, நீதிமன்றத்தையோ அணுகிதான் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டுமே தவிர இவ்வலுவலகத்தால் செய்ய இயலாது. மேலும், இதற்கு முன் வேறு எந்த புகாரும் இது தொடர்பாக வந்ததாக அறியப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மனுதாரருக்கு வழங்கப்பட்ட மின்இணைப்பு தற்காலிகமாக மின்துண்டிப்பு செய்தது தொடர்பாக பெறப்பட்ட ஆட்சேபனை மற்றும் இதர விவரங்கள் மனுதாரருக்கு பலமுறை சம்மந்தப்பட்ட பிரிவு அலுவலர் மூலம் நேரடியாகவும் கடிதம் மூலமாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் இந்த வழக்கு தொடர்பான அனைத்து விவரமும் மாவட்ட மின்நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றம் சிவகங்கையில் நடந்த விசாரணையில் மனுதாரர் அளித்த வாதுரைக்கு எதிர்வாதுரை முழுமையாக சமர்பிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி மன்றம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் வாதுரை அடிப்படையில் TNERC விதிமுறை படி தீர்ப்பு வழங்கியுள்ளது. அந்த தீர்ப்பில் TNERC விதிமுறைகளை மேற்கோள்காட்டி உரிய அறிவிப்பு வழங்கப்பட்டும் அந்த காலகட்டத்திற்குள் மனுதாரர் வராததாலும் எவ்வித ஆவணமும் சமர்பிக்காததாலும் தற்காலிக மின்துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை ஊர்சீதம் செய்தும், மின்சாரம் என்பது மிகவும் அத்தியாவசியமானது என்றும், இன்றைய சூழ்நிலையில் குடும்பத்தின் வாழ்வாதாரம் என்பதால் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் மின்இணைப்பு வழங்க வேண்டும் என்பது நியாயமானது எனவும், ஆதலால் எதிர்மனுதாரர் TNERC விதிகளுக்கு உட்பட்டு மின்இணைப்பு வழங்க வேண்டும் எனவும், அதற்கு என்ன என்ன ஆவணங்கள் மனுதாரர் அளிக்க வேண்டும் என தெளிவாக தனது தீர்ப்பில் குறிப்பிட்டு அந்த ஆவணங்களை எதிர்மனுதாரரிடம் 60 நாட்களுக்குள் மனுதாரர் சமர்பித்து மறுமின்இணைப்பு பெற்றுக் கொள்ளலாம் என்று உத்தரவு பிறப்பித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 ஆனால் இதுவரை மனுதாரர், எதிர்மனுதாரரிடம் எந்த ஆவணங்களையும் அளித்து மறு மின்இணைப்பு ஏதும் கோரவில்லை எனவும், இந்த சூழ்நிலையில் மனுதாரர் மேல்முறையீடு செய்துள்ளதாகவும், எனவே, மேல்முறையீட்டு மனுவில் அளிக்கப்படும் உத்தரவின் அடிப்படையில் தான் இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் 2018–ஆம் ஆண்டுக்கு முன்பு வரை ஷண்முகநாதபுரம் கிராமம், மேலசெம்பொன்மாரி குரூப் புல என் –443/5 உட்பிரிவிற்கு முன் 6.56 விஸ்தீரணம் கொண்டதாகவும், அதற்கான கிராம கணக்கு உள்ளதாகவும், 21.05.1966 ஆவணப்படி இந்த இடம் அருணாச்சலம் செட்டியாரின் ஐந்து வாரிசுகளுக்கு பொதுவானது எனவும், ஒவ்வொரு வாரிசுக்கும் இந்த இடத்தில் ஒரு பங்கு மட்டுமே உள்ளதாகவும், 15.06.2018 முன்பு வரை இந்த முழு இடத்திற்கும் ஒரே கூட்டு பட்டா எண். 514 மட்டுமே இருந்ததாகவும், கூட்டு பட்டாவில் தாக்களாகி இருந்த பெயர்கள் –1) மு.கல்யாணி ஆச்சி (க/பெ –அரு முத்துக்கருப்பன்), 2) அரு. சாத்தப்பன் 3) அரு. அண்ணாமலை 4) ரா. அபிராமி ஆச்சி (க/பெ – அரு. ராமநாதன்) 5) அரு. அருணாச்சலம் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 தனது மின் இணைப்பிற்கு ஆட்சேபனை தெரிவித்த M.R.AR அண்ணாமலை தனக்கு என்று இந்த புலத்தில் உள்ள ஒரு பங்கை தனது மகளான பிரியா அண்ணாமலைக்கு 18–05–2018 ஆம் தேதி தானம் கொடுத்துள்ளதாகவும், இதன் அடிப்படையில் உட்பிரிவு செய்யப்பட்டு புல எண் 443/11 விஸ்தீரணம் 1.31 மற்றும் பட்டா எண்–704 (பிரியா அண்ணாமலை) உருவாக்கப்பட்டுள்ளதாகவும், அதே போன்று தனது மின் இணைப்பிற்கு ஆட்சேபனை தெரிவித்த மற்றும் ஒரு நபர் MR.AR சாத்தப்பன் தனக்கு என்று இந்த புலத்தில் உள்ள ஒரு பங்கை தனது மகனான ரமேஷிற்கு 28–05–2018 ஆம் தேதி தானம் கொடுத்துள்ளதாகவும், இதன் அடிப்படையில் உட்பிரிவு செய்யப்பட்டு புல எண் 443/12 விஸ்தீரணம் 1.31 மற்றும் பட்டா எண்–705 (ரமேஷ்)

உருவாக்கப்பட்டுள்ளதாகவும், மேற்குறிப்பிட்டுள்ள நில உட்பிரிவு மற்றும் பட்டா மாறுதல், இந்த இடத்தில் உரிமை உள்ள மற்ற பட்டாதாரர்கள் அனுமதி கோராமல் மோசடியாக வட்டாச்சியர் அலுவலக கூட்டுசதியுடன் வழங்கப்பட்ட மோசடி பட்டாவாகும் என்றும் மேலும் இந்த பட்டா மாறுதலில் முரண்பாடுகளும், பிழைகள் உள்ளதாகவும் இந்த பட்டா மாறுதல் தொடர்பாக எந்த ஒரு விவரவும் பதியப்படவில்லை என VAO தனது அறிக்கையில் கூறியுள்ளதாகவும் VAO அறிக்கை இணைக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 ஆட்சேபனை தெரிவித்த இருவரது பங்கை (2.62 விஸ்தீரணம் 443/11 மற்றும் 443/12) நீக்கி விட்ட பிறகு, மீதமுள்ள 434 விஸ்தீரணம் கொண்ட இடத்தில் இரண்டு புல எண்கள் – 443/5 (262) மற்றும் 443/13 (131) தாக்கலாகி வருகிறது என்றும் இந்த இரு புலங்களில் ஆட்சேபனை தெரிவித்த M.R.AR சாத்தப்பன் மற்றும் M.R.AR அண்ணாமலை அவர்களுக்கு எந்த ஒரு உரிமையும் பங்கும் கிடையாது என்றும், அவர்கள் தங்கள் இருவருக்கும் தலா ஒரு பங்கு என்று மொத்தம் இரண்டு பங்கை எடுத்துக் கொண்டபிறகு மீண்டும் மற்றவர்கள் பாகத்தில் பங்கு கோருவது சட்டத்திற்கும் இயற்கைக்கும் எதிரான மோசடி செயலாகும் ஆட்சேபனை தெரிவித்த இருவரது பெயரை பட்டா எண் 514–ல் இருந்து நீக்க கோரி வட்டாச்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 மேலும் M.R.AR சாத்தப்பன் மற்றும் M.R.AR அண்ணாமலை தனக்கு எதிராக தொடுத்த பாகப்பிரிவினை வழக்கில் (OS. No. 07/2012) தோல்வியை தழுவி உள்ளார்கள் என்றும், குறிப்பாக தான் எந்த இடத்தில் மின் இணைப்பு கோரினாரோ அதே இடத்தை பொது என்று வழக்கில் கூறி தோல்வியை தழுவி உள்ளார்கள் என்பதை நீதிமன்ற தீர்ப்பில் கூறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து அத்தீர்ப்பாணையை சமர்பித்துள்ளார்.

7.6 மேலும் இந்த இடத்தில் உரிமை உள்ள மற்ற பட்டாதாரர்கள் அபிராமி ஆச்சி (க/பெ – ராமநாதன்) மற்றும் அழகம்மை (க/பெ –அருணாச்சலம்) ஆகிய இருவரும் M.RAR சாத்தப்பன் ரமேஷ், M.R.AR அண்ணாமலை மற்றும் பிரியா அண்ணாமலை மீது தங்கள் அலுவலகத்துக்கும் மற்றும் கிராம பஞ்சாயத்துக்கும் பதிவு தாபல் மூலம் புகார் மனு அனுப்பியுள்ளதாகவும், ஆனால் சிவகங்கை குறைதீர்க்கும் மன்றம் உத்தரவு ஆணையில்

அவர்களின் ஆட்சேபனையின் பேரில்தான் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது என்று எழுதப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.7 மேலும், மின் இணைப்பை துண்டிப்பதற்கு முன் தங்களுக்கு எந்த ஒரு பதிவு தபாலும் அனுப்பவில்லை என்றும் இருப்பினும் தாங்கள் ஊர்க்காரர்கள் மற்றும் மின் இணைப்பை துண்டிக்கவந்த ஊழியரின் தொலைபேசி வாயிலாக அறியவந்ததாகவும் எனவே 60 நாட்கள் முன்பே தகவல் தெரிவிக்கப்பட்டது என்று கூறுவது முற்றிலும் பொய்யாகும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.8 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மின்இணைப்பு தற்போது தற்காலிக மின்துண்டிப்பில் உள்ளதாகவும், தற்காலிக மின் துண்டிப்பு செய்வதற்கு முன் முழுமையாக கோப்பில் இருந்த ஆவணங்கள், ஆட்சேபனைதாரர்கள் அளித்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மனுதாரர் கால அவகாசம் வழங்கி அதிலும் கோரப்பட்ட ஆவணங்கள் ஏதும் மனுதாரர் அளிக்காததால் தற்காலிக மின் துண்டிப்பு செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 மேலும், மின்இணைப்பு தற்காலிகமாக துண்டிக்கப்பட்டதற்கு நிவர்த்திகாணும் பொருட்டு மனுதாரரிடம் இந்த மின்இணைப்பு வழங்கப்பட்ட ஸ்தலம் தங்களுக்கு சொந்தமானது என்பதற்கான கூடுதல் ஆவணம் வழங்க கோரி கால நிர்ணயம் செய்யப்பட்டு கடிதம் எழுதப்பட்டது ஆனால் மனுதாரர் அந்த கடிதத்தில் குறிப்பிட்ட காலக்கெடுவான 60 நாட்கள் கடந்தும் எந்தவித ஆவணமும் அளிக்கவில்லை எனவும், இதை தொடர்ந்து மின்துண்டிப்பு தொடர்பான அறிவிப்பு கடிதம் மனுதாரருக்கு வழங்க முயன்றபொழுது மனுதாரர் அங்கு இல்லாததால் மனுதாரரை கைபேசியில் இவ்வலுவலக பணியாளர்களை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கப்பட்டு பின்னர் அறிவிப்பு கடிதம் அந்த இடத்திலேயே ஒட்டப்பட்டதாகவும், இப்படி இருக்கையில் மனுதாரர் முற்றிலும் பொய்யானது தனது மனுவில் குறிப்பிட்டுள்ளது உண்மைக்கு புறம்பானது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.10 மனுதாரர் தெரிவித்துள்ள விவரங்கள் அனைத்தும் சொத்து தொடர்பான உரிமையியல் பிரச்சனை என்பதால் மனுதாரர் தெரிவித்ததுபோல் மற்றவர்களை விசாரணை செய்ய இயலாது எனவும், மனுதாரருக்கு வழங்கப்பட்ட மின்இணைப்பு

தற்காலிகமாக மின்துண்டிப்பு செய்தது தொடர்பாக பெறப்பட்ட ஆட்சேபனை மற்றும் இதர விவரங்கள் மனுதாரருக்கு பலமுறை சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலர் மூலம் நேரடியாகவும் கடிதம் மூலமாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் இந்த வழக்கு தொடர்பான அனைத்து விவரமும் மாவட்ட மின்நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றம் சிவகங்கையில் நடந்த விசாரணையில் மனுதாரர் அளித்த வாதுரைக்கு எதிர்வாதுரை முழுமையாக சமர்பிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி மன்றம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் வாதுரை அடிப்படையில் TNERC விதிமுறை படி தீர்ப்பு வழங்கியுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும், அதற்கு என்ன என்ன ஆவணங்கள் மனுதாரர் அளிக்க வேண்டும் என தெளிவாக தனது தீர்ப்பில் குறிப்பிட்டு அந்த ஆவணங்களை எதிர்மனுதாரரிடம் 60 நாட்களுக்குள் மனுதாரர் சமர்பித்து மறுமின்இணைப்பு பெற்றுக் கொள்ளலாம் எனவும், ஆனால் இதுவரை மனுதாரர் எந்த ஆவணங்களையும் அளித்து மறு மின்இணைப்பு ஏதும் கோரவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.11 மேற்கூறிய வாதி பிரதி வாதங்களின் அடிப்படையில் மேல்முறையீட்டாளருக்கு வழங்கிய தற்காலிக மின் இணைப்பை எதிர்மனுதாரர் ஆட்சேபனை முறையீட்டின் அடிப்படையில் மின் துண்டிப்பு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். ஆனால் மின் இணைப்பு வழங்கும் போது மேல்முறையீட்டாளர் வழங்கிய ஆவணங்களின் அடிப்படையில் மின் இணைப்பு வழங்கியதாக தெரிய வருகிறது. ஆனால் ஆட்சேபனை அளித்தவர் நீதிமன்ற தடை ஆணை எதுவும் அளிக்கவில்லை என்பது தெரிய வருகிறது.

7.12 இது சம்பந்தமாக, ஒருவர் மின்னிணைப்பை உபயோகித்துவரும் நிலையில் ஒரு கட்டிடத்தின் அத்தியாவசியமான மின்சாரத்தை மின் துண்டிப்பு செய்ய போதுமான காரணங்களை ஆராய விரும்புகிறேன்.

**STATUTORY PROVISIONS FOR DISCONNECTION**

| Sl. No. | Provision | Reason |
|---|---|---|
| 1 | Section 56 of Electricity Act 2003<br>Regulation 21 of TNE Supply Code | Non payment of dues |
| **Court Directions** | | |
| 2 | Specific order of disconnection issued by the Court. | |

மேலும், சம்பந்தப்பட்ட தமிழ்நாடு மின்வழங்கல் விதி 21 (1) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"21. **மின்வழங்கல் துண்டிப்பு** :*

*சட்டத்தின் 56 ஆவது சட்டப் பிரிவு, மின் கட்டணம் செலுத்தத் தவறிய மின் வழங்கல் துண்டிப்பு பற்றி பின்வருமாறு கூறுகிறது.*

*(1) அவருக்கு மின்சாரம் வழங்கல் அல்லது செலுத்துதல் அல்லது பகிர்தல் அல்லது சுமந்து செல்லல் (wheeling)தொடர்பாக உரிமதாரருக்கோ மின்னாக்கக் குழுமத்துக்கோ, தனியொருவர், மின்சாரக் கட்டணமாகவோ அல்லது அது தொடர்பான மின்சாரக் கட்டணமல்லாத வேறுபிற தொகையாகவோ அமைந்த நிலுவைகளைக் கட்டப் புறக்கணித்தால், உரிமதாரரோ அல்லது மின்னாக்கக் குழுமமோ (generating company) எழுத்து மூலமாகச் சரியான (clear) 15 நாட்களுக்கான எச்சரிக்கை அறிவிப்பு கொடுத்து விட்டு, அவருக்குரிய கட்டணத்தை அல்லது வேறு பிற தொகையை, வழக்கு மூலமும் மீட்பதற்குக் குந்தகமேதுமில்லாதபடி, மின்சார வழங்கலைத் துண்டிக்கலாம். மேலும் அந்நோக்கங்கருதி மின்சாரம் வழங்கும் எந்த மின் தொடரையும் துண்டிக்கலாம் அல்லது கழற்றிவிடலாம். மின்சாரத்தை வழங்கிய, செலுத்திய பகிர்ந்த அல்லது சுமந்து சென்ற பணியமைப்புகள் உரிமதாரரின் அல்லது மின்னாக்கக் குழுமத்தின் சொத்தாகையால், மின் கட்டணத்தையோ அது சார்ந்த வேறுபிற கட்டணத்தையோ, உரியவர் மின் வழங்கல் துண்டித்தபிறகு மீளவிணைப்பதற்காகும் செலவினங்களையும் சேர்த்துக் கட்டும்வரை மின்னிணைப்பு துண்டிப்பு தொடரலாம். ஆனால் அதற்கு மேல்நீடிக்கக் கூடாது."*

7.13 மேற்கூறிய விதியின்படி பயன்படுத்திய மின் நுகர்வுக்கான மின் கட்டணம் செலுத்தாத நிலையில் மின் துண்டிப்பு செய்யலாம் என அறியப்படுகிறது. மேலும் நீதிமன்ற உத்தரவுக்கிணங்க மட்டுமே மின் துண்டிப்பு செய்யலாம் என்பதும் தெரிய வருகிறது.

7.14 மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் மின்சாரச் சட்டங்கள் மற்றும் தீர்ப்புகளில் உள்ள விதிகளின் அடிப்படையில் இதே போன்ற முந்தைய சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட குறிப்புகளைக் கருத்தில் கொண்டு கூறப்பட்ட சட்ட விதிகளை பரிசீலித்து, பல்வேறு முடிவுகளை வழங்கியுள்ளது. அவற்றில் சில கீழே கூறப்பட்டுள்ளன.

*"(i) In S.A.Ponnappan —vs- J.A. Bath urujaman and two others in W.A.No.1396 of 2007 dated 15.04.2009 (TNEB case) reported in 2009 (2) TNCJ 411 (Mad), the Division Bench of the Hon'ble High Court has held as follows :-*

*"10. The above provision makes it clear that an intending consumer, who is in lawful occupation, can apply to the Electricity Board, with the consent of the landlord, for supply of electricity. In*

*case if the owner refused to give consent letter or he is not in station, the consumer shall produce a proof that he is in lawful occupation of the premises and also execute an indemnity bond in Form 6 of the Annexure Ill of this Code indemnifying the Electricity Board against any loss on account of disputes arising out of effecting service connection.*

*11. In such view of the matter, when there is a provision as enacted by the State Electricity Regulatory Commission in accordance with Section 86 of the Electricity Act, 2003 (Central Act 36 of 2003), certainly the lawful occupant has a right to have the electricity supply and if he is compelled to lead his life in darkness, it would amount to make him lead an animal life, which is not the purport of the Constitution. Therefore, we are of the view that the said Clause confers such valuable right to the occupant."*

*(ii) When a consumer for many years was directed to produce documents pursuant to a complaint alleging production of fabricated documents to get service connection, the Hon'ble High Court, Madras, in WP No.29586 of 2015 dated 21.09.2015, has held as follows :-*

*"5. It is very unfortunate to note that based on the complaint received from Seviappan which does not disclose any material evidence, the fifth respondent has issued notice to the petitioner to produce the relevant documents. In fact, the fifth respondent should have called upon the complainant to produce the relevant document with regard to his claim in respect of the said property. Assuming for a moment that even if there is a dispute, the respondent has got no jurisdictional power to decide about the issue and if it all, only the Civil Court can decide the issue. Moreover, the electricity service connection is not given recently but it was given about 15 years ago. When that is the position, the issuance of notices by the fifth respondent is unjustified, unwarranted and to be deprecated and it is accordingly, deprecated."*

மேற்கூறிய தீர்ப்புகளில் ஒருவர் வசித்துவரும் நிலையில் அக்குடியிருப்புக்கான மின்னிணைப்பை மின் துண்டிப்பு செய்ய கூடாது என்பது தெரியவருகிறது.

7.15 இந்நிலையில் மேல்முறையீட்டாளருக்கு தற்காலிக மின் இணைப்பு வழங்கப்பட்ட காலத்தில் படிவம் 1A–இன் படி பெறப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்து 24.05.2022 அன்று மின் இணைப்பு வழங்கிய நிலையில் மேலும் அதன் தொடர்ச்சியாக மேல்முறையீட்டாளர் உரிய கட்டணத்தை செலுத்தி வந்த நிலையில், நீதிமன்ற தடை உத்தரவு இல்லாத நிலையில் ஆட்சேபனையாளர்களின் முறையீட்டின் அடிப்படையில் மின்துண்டிப்பு செய்தது தெரிய வருகிறது.

7.16 எனவே, ஆட்சேபனையின் அடிப்படையில் மின் துண்டிப்பு செய்தது என்பது மேற்கூறப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின்படி மின் நுகர்வுக்கான மின் கட்டணம் செலுத்தாத நிலையில் மின் துண்டிப்பு செய்யலாம் என்பதற்கும், மேலும் நீதிமன்ற உத்தரவுக்கிணங்க மட்டுமே மின் துண்டிப்பு செய்யலாம் என்பதற்கு மாறான நிலைபாடு உரிமதாரர் எடுத்ததாக தெரிய வருகிறது. மேலும் சட்ட ஒழுங்கு பிரச்சனையை

தவிர்க்கும் பொருட்டு 23.08.2022 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டது என்பது உரிமதாரரின் வரம்பிற்குட்படாத செயலாக தெரிகிறது. ஆகவே, ஆட்சேபனை மனுவின் அடிப்படையில் ஆட்சேபனை செய்த வாதிகளிடமிருந்து மின்னிணைப்பு துண்டிப்பு செய்வதற்கான உரிய நீதிமன்ற ஆணை பெறப்படாதபட்சத்தில் உரிமதாரர் எடுத்த நிலைபாடு சரியில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

7.17 எனவே, இவ்வழக்கில் மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கிய இடத்திற்கு அவருடைய வாதியிடமிருந்து நீதிமன்ற தடை ஆணை இல்லாதபட்சத்தில் மின் துண்டிப்பு செய்தது தவறு என தீர்வு செய்யப்படுகின்றது. மேலும், அந்த மின் இணைப்பு கட்டுமான பயன்பாட்டிற்கான தற்காலிக மின் இணைப்பாக இருப்பதால் மேல்முறையீட்டாளர் இம்மின் இணைப்பை உரிய கட்டுமான பணிக்கு பயன்படுத்தவில்லை என்பது தெரியவந்தால் உரிமதாரர் தமிழ்நாடு மின் பகிர்மான விதி 33(4)–இன் அடிப்படையில் உரிய மேல்நடவடிக்கை எடுப்பதற்கான விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"33. இசைவுப் பத்திரங்கள்*
*xxx*
*xxx*

*(4) நுகர்வோர், இசைவுப் பத்திரத்தில் உள்ள உடன்படிக்கைகளையோ, விதித்தொகுப்பின் விதிமுறைகள் மற்றும் வரையறைகளையோ, சட்டத்தின் கீழமைந்த சட்டங்களும் விதிகளும் உள்ளடக்கிய இசைவுப் பத்திரம் தொடர்பான எந்தவொரு சட்டத்தின் விதி வகுப்புகளையோ அல்லது அவ்வப்போது வெளியிடப்படும், வேறுபிற ஆணைகளையோ மீறினால், அத்தகைய விதி மீறலை குறிப்பிடும் ஒரு மாத அறிவிப்பை உரிமதாரர் தந்து விட்டு, நுகர்வோருடன் செய்து கொண்ட இசைவுப் பத்திரத்தை உரிமதாரரே முடித்துக் கொள்ளலாம். உரிமதாரர், அத்தகைய முடிவுறுத்தலுக்கான காரணங்களை நுகர்வோருக்கு தெரிவித்தல் வேண்டும்."*

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி, நீதிமன்ற ஆணை இல்லாத நேர்வில் எதிர்மனுதாரர் மின் துண்டிப்பு செய்தது தவறான நிலைபாடு என்பதால் மீண்டும் மின் இணைப்பு தொடர ஆணையிடப்படுகின்றது. மேலும் எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரின் கட்டுமான பணி நடைபெறுவதை ஆய்வு செய்து

தேவையெனில் மின்பகிர்மான விதி 33(4)–இன்படி நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 90/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திருமதி மங்கை, க/பெ. சாத்தப்பன், – By RPAD
எண்.11, காஞ்சி மாநகர்,
சேரன் மாநகர் 6வது பஸ் ஸ்டாப் அருகில்,
விளாங்குறிச்சி போஸ்ட், கோவை – 641 035.

2. செயற்பொறியாளர்/ பகிர்மானம்/காரைக்குடி,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS வளாகம், கழனிவாசல், காரைக்குடி – 630 702.

3. உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம்/நகர்/காரைக்குடி,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS வளாகம், கழனிவாசல், காரைக்குடி – 630 702.

4. உதவி பொறியாளர்/ பகிர்மானம்/ஊரகம்/காரைக்குடி,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS வளாகம், கழனிவாசல், காரைக்குடி – 630 702.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிவகங்கை கலெக்டர் அலுவலகம், சிவகங்கை – **630 562.**

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
**144,** அண்ணாசாலை, சென்னை – **600 002.**

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.